**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.276/2022**

பி.**வா.சா.1 – பச்சையம்மாள், க/பெ.கணேசன்**

**நாள். 06.08.2026**

**பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வழக்கு தாக்கல் செய்த நாகம்மாளை எனக்கு எவ்வளவு வருடமாக தெரியும் என்றால் 10,15 வருடங்களாக தெரியும். தாவா சொத்து திண்டுக்கல் குள்ளனம்பட்டி, அரசுஐடி பின்புறம் உள்ளது. அதன் சர்வே எண் ஞாபகம் இல்லை. தாவா சொத்து நான் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். கானப்பாடியில் இருந்து ஒரு வாத்தியார் மணிவேல் என்பவரிடமிருந்து 09.11.2006 ல் வாங்கினேன். கிரையத் தொகையாக சதுரடி 27 ரூபாய்க்கு ரூ.1 ,270,000/க்கு வாங்கினேன். கிரையப்பத்திரம் செய்து கொண்டேன். நான் கிரையம் வாங்கியது காலியிடமாகத்தான் வாங்கினேன், என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2. பத்திரம்தான் நான் வாங்கியது என்றால் சரிதான். அதன்பின்பு நான் அந்த இடத்தில் செட் போட்டு சேப்டி லாக்கர் தொழில் செய்து வருகிறேன். கிரையம் வாங்கி 4,5 வருடங்கள் கழித்து தொழில் ஆரம்பித்தேன். மேற்படி தொழிலை நான், என் கணவர், என் பசங்கள் ஆகியோர்கள் சேர்ந்து செய்கிறோம், கல்யாணம் செய்து விட்டு பிள்ளைகள் தனியாக வசித்து வருகிறார்கள். நாகம்மாளிடம் தாவா சொத்தைப் பொறுத்து கிரைய உடன்படிக்கை செய்தேனா என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1. என்றால் சரிதான். அதிலுள்ள வாசகங்கள் சரி என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் யார், யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் மணிகண்ட பிரபு, மாணிக்கம் என்ற புரோக்கரும் சாட்சி கையெழுத்து போட்டார்கள். ரமேஷ்குமார் எனது பெரிய பையன் ஆவார். வீரமணி எனது 2 வது மகன் ஆவார். வா.சா.ஆ.1. கிரையப்பத்திரத்தை நான் சொல்லி பழைய பத்திரத்தை கொடுத்து தயார்செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்லியுள்ளவாறு மணிகண்ட பிரபு, மாணிக்கம் என்ற புரோக்கரும் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றாலும் என் மகன்கள் ரமேஷ்குமாரும், வீரமணியும் சாட்சியாக கையெழுத்து செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.1. ஆவணப்படி வாதிக்கு நான் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, ரூ.5 லட்சம் வட்டிக்குத்தான் வாங்கினேன். அக்ரிமென்ட் படி கிரையத் தொகையாக ரூ.8,50,000/–பேசப்பட்டு அட்வான்சாக ரூ.7,50,000/– வாங்கி கொண்டு மேற்படி வா.சா.ஆ.1. ஐ எழுதிக் கொடுத்தோம் என்றால் சரியல்ல, ரூ.5 லட்சம்தான் வாங்கினேன். 20 மாத கால கெடுவுக்குள் பாக்கி ரூ.1 லட்சத்தை கொடுத்து கிரையம் வாங்கி கொள்ள வேண்டும் என்று

எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வட்டிக்குத்தான் வாங்கினேன். நான் சொல்வது போல் 20 மாத வட்டிக்குத்தான் வாங்கினேன் என வா.சா.ஆ.1ல் இல்லை என்றால் சரியல்ல. கிரையம் பேசி வாங்கவில்லை கடன்தான் வாங்கினேன் என சொல்வதற்கு எதாவது ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. ரூ.5 லட்சம் கடன் வாங்கியதற்கு ஆவணம் இருப்பதாக நான் சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அக்ரிமெண்ட் போடும் போது காலியிடமாக வாங்கி சேப்டி லாக்கர் தொழில் செய்வதை காலிசெய்து கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கேட்கும் போதெல்லாம் நான் அவகாசம் கேட்டதால்தான் காலதாமதம் ஆனது என்றால் சரியல்ல. 20 மாதத்திற்குள் பணத்தை கட்டிவிட்டால் அக்ரிமெண்டை இரத்து செய்து தருமாறு நான் கேட்டேனா என்றால் என் மகன்தான் கேட்டார். இதுகுறித்து நான் வாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் என் மகனோ, நானோ கேட்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடன் வாங்கியதாக நான் சொல்வது போய் என்றாலும் கிரையத்துக்குத்தான் உடன்படிக்கை செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. அதனால் தாவா சொத்தில் தளவாடி சாமான்களை அப்புறப்படுத்தி விட்டு வேறு இடத்திற்கு செல்கிறேன் என சொன்னதால்தான் 20 மாதங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. 20 மாதத்தில் பணத்தை நான் கட்டி விட்டேன் என சொல்வதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, பணமாக கொடுத்ததால் இரசீது இல்லை. பணம் கொடுத்து வாங்கியதற்கு சாட்சி உள்ளதா என்றால் என் பெரிய பையனிடம்தான் வாதி வாங்கி சென்றார். நான் சொல்வது பொய் என்றாலும் வாதியை மோசடி செய்வதற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரையம் பேசி அட்வான்ஸ் தொகை வாங்கி கொண்டு வாதி கேட்கும் போதெல்லாம் இடத்தை மாற்றுவதற்காக அவகாசம் கேட்டதாலும் கிரையம் செய்ய மறுத்ததாலும் வாதி தரப்பு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி பாக்கி தொகை ரூ.1 லட்சத்தை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. அக்ரிமெண்ட் படி நான் கிரையம் எழுதி கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. அக்ரிமெண்ட் மோசடி செய்வதற்காக நானும் என் மகனும் சேர்ந்து பொய் சொல்கிறோம் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. அசல் பத்திரத்தை உடன்படிக்கை செய்யும் போது அதே தேதியில் வாதியிடம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.06 19:37:11 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.